# நெல்லிக்குப்பம் நகராட்சி
## நகர் மன்றக் கூட்டம் நிகழ்ச்சி நிரல்

2018–ம் ஆண்டு நவம்பர் மாதம் 22 ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 5.00 மணிக்கு நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற உள்ள நகர் மன்றத்தின் சாதாரண கூட்டத்தில் முடிவு செய்யப்படவுள்ள மன்றப்பொருள்கள் விபரம்.

முன்னிலை : – திரு. எஸ்.மகாராஜன்
தனி அலுவலர்
நெல்லிக்குப்பம் நகராட்சி

**மன்றபொருள் .1.** நெல்லிக்குப்பம் நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவிற்கு மழைகாலம் கருதியும், முன் எச்சரிக்கை நடவடிக்கைகளுக்கும் மற்றும் பொது கழிவறைகளை சுத்தம் செய்யவும் அத்தியாவசியமாக 2018–19ம் ஆண்டிற்கு கீழ்கண்டுள்ள விவரப்படி பொருட்கள் தேவையாக உள்ளது.

1. பிளீச்சிங் பவுடர் – 2000 கிலோ கிராம்
2. நீர்த்த சுண்ணாம்பு – 3000 கிலோ கிராம்
3. பினாயில் – 200 லிட்டர்

மேற்கண்ட பொருட்கள் திருச்சி, தமிழ்நாடு பல்நோக்கு சேவை தொழில் கூட்டுறவு சங்கத்தில் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.3,00,000/– நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றப் பொருள் வைக்கலாம்.

அலுவலகக் குறிப்பு: 1.மன்றம் அனுமதிக்கலாம்

2.அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்

ந.க.எண். 2598/2018/எச்1

**தீர்மான எண் : 254 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது.**

**மன்றபொருள் .2.** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 20 எண்ணிக்கை கொண்ட கழிவறைகளை தினசரி சுத்தம் செய்யும் பணிக்கு மன்ற தீர்மான எண்.210 நாள்.10.10.2018 அனுமதி பெற்று 14.11.2018 தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற கீழ்கண்ட நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியல் மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | நிறுவனத்தின் பெயர் விலாசம் | தொகை |
|---|---|---|
| 1 | திருமதி.எஸ்.புவனேஸ்வரி,<br>ஒப்பந்ததாரர்,<br>நெல்லிக்குப்பம். | – 0.08%<br>(மதிப்பீட்டு தொகையை விட குறைவு) |
| 2 | M/S JAY AND CO<br>ஒப்பந்ததாரர்,<br>கடலூர். | 1.67%<br>(மதிப்பீட்டு தொகையை விட அதிகம்) |

அலுவலக குறிப்பு – வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1ல் கண்டுள்ள திருமதி.எஸ்.புவனேஸ்வரி, ஒப்பந்ததாரர், நெல்லிக்குப்பம் அளித்துள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.4107,/2018/எச்1

**தீர்மான எண் : 255 அலுவலக குறிப்பினை ஏற்று குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்க அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள் .3.** இந்நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்த திரு.ஆர்.அஞ்சாலாட்சி 30.06.2018 அன்று ஓய்வு பெற்று விட்ட காரணத்தால், அவரது ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதித் (SPF) தொகை மற்றும் அதற்கான வட்டி தொகையினை வழங்ககுமாறு கோரியுள்ளார்.

அன்னாரின் விண்ணப்பம் உரிய பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில் கீழ்கண்டுள்ள விவரப்படி திருமதி.ஆர்.அஞ்சாலாட்சி துப்புரவு பணியாளர் கணக்கில் உள்ள தொகையினை வழங்கப்பட வேண்டியுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | பணியில் சேர்ந்து 1990–91 முதல் சிறப்பு சேமநல நிதி பிடித்தம் செய்யப்பட்ட நாள். | 26.2.1990 |
| 2 | ஓய்வு பெற்ற நாள் | 30.06.2018 |
| 3 | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை பிடித்தம் செய்த தவணைகள் | 148 தவணைகள் |
| 4 | சிறப்பு சேமநல நிதி கடைசியாக பிடித்தம் செய்யப்பட்ட மாதம்/வருடம் | 3/2018 |
| 5 | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை பிடித்தம் செய்த தொகை | ரூ.2960/– |
| 6 | 01.08.1996 முதல் 30.04.2018 முடிய கணக்கிடப்பட்ட வட்டித்தொகை | ரூ.29203/– |
| 7 | நகராட்சி அரசு பங்கு தொகை | ரூ,10000/– |
| | மொத்தம் | ரூ.42163/– |

எனவே மேற்கண்டுள்ள விபரப்படி திரு.ஆர். அஞ்சாலாட்சி துப்புரவு பணியாளர் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை **ரூ.2960/–**ம், அதற்குண்டான வட்டித்தொகை **ரூ.29203/–**ம் நகராட்சி அரசு பங்கு தொகை ரூ.10000/– சேர்த்து மொத்தம் ரூ. 42163/–வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

<u>ந.க.எண்.1559/2018/பி2</u>

**தீர்மான எண் : 256 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள் .4.** இந்நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்த திருமதி. எஸ்.நவநிதம் 30.06.2018 அன்று ஓய்வு பெற்று விட்ட காரணத்தால், அவரது ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதித் (SPF) தொகை மற்றும் அதற்கான வட்டி தொகையினை வழங்ககுமாறு கோரியுள்ளார்.

அன்னாரின் விண்ணப்பம் உரிய பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில் கீழ்கண்டுள்ள விவரப்படி திருமதி. எஸ்.நவநிதம் துப்புரவு பணியாளர் கணக்கில் உள்ள தொகையினை வழங்கப்பட வேண்டியுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | பணியில் சேர்ந்து 1990–91 முதல் சிறப்பு சேமநல நிதி பிடித்தம் செய்யப்பட்ட நாள். | 26.2.1990 |
| 2 | ஓய்வு பெற்ற நாள் | 30.06.2018 |
| 3 | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை பிடித்தம் செய்த தவணைகள் | 148 தவணைகள் |
| 4 | சிறப்பு சேமநல நிதி கடைசியாக பிடித்தம் செய்யப்பட்ட மாதம்/வருடம் | **மார்ச் 18** |
| 5 | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை பிடித்தம் செய்த தொகை | 2960 |
| 6 | 01.08.1996 முதல் 30.06.2018 முடிய கணக்கிடப்பட்ட வட்டித்தொகை | 11135 |
| 7 | நகராட்சி அரசு பங்கு தொகை | 10000 |
| | மொத்தம் | 24095 |

எனவே மேற்கண்டுள்ள விபரப்படி திருமதி. எஸ். நவநிதம் துப்புரவு பணியாளர் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை **ரூ.2960/–**ம், அதற்குண்டான வட்டித்தொகை **ரூ.11135**ம் நகராட்சி அரசு பங்கு தொகை ரூ.10000/– சேர்த்து மொத்தம் ரூ.24095/ –வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.2677/2018/பி2**

**தீர்மான எண் : 257 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள் .5.** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட திருக்கண்டேஸ்வரம் நகராட்சி உயர்நிலைப்பள்ளி ( நகராட்சியிடம்) இடத்தில் மிகவும் பட்டு போன இலவ மரத்தினால் உயிர் மற்றும் பொருட்சேதம் வரும் கஜா புயலால் பாதிப்பு ஏற்பட வாய்புள்ளதாலும் பணியின் அவசர அவசியத்தினை கருதி பணியினை நகராட்சி சட்டபிரிவு 15-ன் கீழ் மேற்கொள்ளப்பட்டு 14.11.2018.அன்று மாலையே இலவ பஞ்சு மரம் வெட்டப்பட்டு வெட்டப்பட்ட நபரான ( கூலி தொழிலாளிக்கு) திரு.சௌந்தர் அவர்களுக்கு தொகை ரூபாய்3500/–ஐ அவசர அவசியம் கருதி பொது நிதியிலிருந்து தொகை வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

அலுவலகக்குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம் .

**ந.க.எண்:4140/2018/சி1/எப்1**

**தீர்மான எண் : 258 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

**மன்றபொருள் .6.** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 10 வருவாய் கிராமங்களிலும் கஜா புயல் தொடர்பாக விழிப்புணர்வு ஆட்டோவில் 15/11/2018. ஒரு நாள் திரு.சந்திரசேகரன் என்பவரால் மாவட்ட ஆட்சியர்அவர்களின் வாய்மொழி உத்தரவு , துணை ஆட்சியர் , கஜா புயல் Nodal Officer வாய்மொழி உத்திரவின் படி பொது மக்களின் முன் எச்சரிக்கை நடவடிக்கைக்காக விளம்பரம் செய்யப்பட்டது. இதற்கு ரூ.2500/– செலவிடப்பட்டு .திரு. .சந்திரசேகரன் என்பவருக்கு அவசரம் அவசியம் கருதி பிரிவு 15ன் கீழ் வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

அலுவலகக்குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம் .

**ந.க.எண்.4140/2018/எப்1.**

**தீர்மான எண் : 259 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

**மன்றபொருள் .7.** நெல்லிக்குப்பம் நகராட்சி பொது சுகாதார பயன்படுத்தப்பட்ட வரும் TN/AH6556 TATA AC வாகனம் 1.புதிய ஆங்கில் பொருத்த வேண்டும் 2. கியர் டாப் மாற்ற வேண்டும் 3.ஜட்டாரலிக் ஒயரிங் மாற்ற வேண்டும்.4.ஜட்டாலிக் ஆயில் குறைந்ததற்கு நிரப்பபட் வேண்டும் . எனவே வட கிழக்கு பருவ மழை பெய்து வருவதாலும் கஜா புயல் தாக்கும் அபாயம் உள்ளதாலும் அனைத்து வாகனங்களும் பயன்படுத்தக் கூடிய தயார் நிலையில் வைத்திருக்க வேண்டிய அவசியம் உள்ளதால் உள்ளூர் விலைப்புள்ளி பெற்று (OM SAKTHI ENGENEERING WORK KARAMANIKUPPAM CUDDALORE-2) குறைந்த விலைப்புள்ளி வழங்கியதை .ரூ11.500/– தொடர்ந்து சரி செய்த வகையில் தொகை .ரூ.11500/– பிரிவு 15-ன் கீழ் வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

அலுவலகக்குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம் .

**ந.க.எண்.4671/2018/எச்1.**

**தீர்மான எண் : 260 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

**மன்றபொருள் .8.** நெல்லிக்குப்பம் நகராட்சி பொது சுகாதார பயன்படுத்தப்பட்ட வரும் TN.31. B 9525 MINI Lorry வண்டிக்கு 05.11.2018 அன்று Salinade Switch பழுது அடைந்ததால் அதனை புதியதாக மாற்றப்பட்டது. பருவ மழைக்காலமாக இருக்கின்ற காரணத்தாலும் கஜா புயல் தாக்குதல் வாய்புள்ளதாலும் வாகனத்தை தயார் நிலையில் வைத்திட வேண்டியஅவசியத்தை கருத்தில் கொண்டு செலவு செய்த திரு.கே. ராஜராஜசோழன் அவர்கள் சொந்த செலவில் மேற்கொள்ளப்பட்டதற்கு ரூ.2500/– நகராட்சி சட்டபிரிவு 15ன் கீழ் வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

அலுவலகக்குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம் .

ந.க.எண் 4672/2018/எச்1

**தீர்மான எண் : 261 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

**மன்றபொருள் .9.** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கஜா புயலின் காரணமாக மழைநீர் தேங்கும் பகுதியில் உள்ள கால்வாய்கள் மற்றும் சிறுபாலம் நீர் புகும் துளைகளை JCB யை கொண்டும் சுத்தம் செய்யும் பணிக்கு பட்டியல் தொகை **ரூ.58905/–** ஸ்ரீ அம்மன் எர்த் முவர்ஸ் உரிமையாளர் K.அருண் . என்பவருக்கு நகராட்சி சட்டப்பிரிவு **15**ன் கீழ் பணி அனுமதிக்கப்பட்டு பட்டியல் தொகை வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

அலுவலகக்குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம் .

.ந.க.எண்.4777/2018/இ1

**தீர்மான எண் : 262 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

**மன்றபொருள் .10.** நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு ஒலிபெருக்கி மைக்செட் ( Cardless Mic Set) புதியதாக வாங்கி வழங்குதல் பணிக்கு நகராட்சிகளின் சட்டம் **1920** பிரிவு **15**ன் கீழ் பட்டியல் தொகை ரூ.**3500/–** ஸ்ரீ மல்லிகா எலக்ட்ரிகல்ஸ் அண்டு எலக்ட்ரானிக்ஸ் அவர்களுக்கு வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

அலுவலகக்குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம் . .

ந.க.எண்.3183/2018/இ1

**தீர்மான எண் : 263 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

**மன்றபொருள் .11.** நெல்லிக்குப்பம் நகராட்சி குடிநீர் நிதியில் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் பிரிவு **15**ன் கீழ் நகராட்சிக்கு சொந்தமான மேல்நிலை நீர் தேக்க தொட்டிகளில் குடிநீர் விநியோகத்திற்கு பயன்படுத்தப்படும் Liquid Chlorine தருவித்து வழங்கியதற்கு கீழ் கண்டவாறு பட்டியல் தொகை M/s.அருணாச்சல அசோசியேட் , நெல்லிக்குப்பம் அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

1. **08.10.2018** தேதி ரூ . **16728/–**
2. **23.10.2018** தேதி ரூ . **11152/–**
3. **02.11.2018** தேதி ரூ . **8364/–**

அலுவலகக்குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம் . .

ந.க.எண்.4059/2018/இ1

**தீர்மான எண் : 264 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

**மன்றபொருள் .12.** நெல்லிக்குப்பம் நகராட்சில் ரூ. **18000/–** ஆயிரம் மதிப்பீட்டில் கஜா" புயலின் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக **200** எண்ணிக்கை மணல் மூட்டைகள் , புதியதாக மரம் அறுக்கும் இயந்திரம் வாங்குதல் , ஏற்கனவே உள்ள பழைய மரம் அறுக்கும் இயந்திரம் மற்றும் இரண்டு நீர் இறைக்கும் இயந்திரம் பழுது பார்த்ததிற்கு அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் பிரிவு **15**ன் கீழ் ஒப்பபடைப்பு பணியாக மதிப்பீட்டு விலை விகிதத்தில் செய்ததிற்கு திருமதி. S.பரிமளா ஒப்பந்ததாரர் நெல்லிக்குப்பம் அவர்களுக்கு பட்டியல் தொகை ரூ.17980/- வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

அலுவலகக்குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்

ந.க.எண்.4778/2018/இ1

**தீர்மான எண் : 265 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

**மன்றபொருள் .13.** ஆயுத பூஜையை **(18.10.2018)** முன்னிட்டு "தொழில் மலர் **2018** " நெல்லிக்குப்பம் நகராட்சியில் **2017–18** மற்றும் **2018–19** ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட , மேற்கொள்ளப்பட இருக்கும் திட்ட பணிகளின் விவரத்தை கடலூார் , மாவட்ட ஆட்சித் தலைவர் ந.க.எண். **144**/செமதொ/**2018** நாள்.**05.10.2018**ன் படி விளம்பரம் செய்ததில் தினமலர் நாளிதழ்க்கு விளம்பரத் தொகை ரூ **.21000/–** நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலக குறிப்பு . மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண் . 4779/2018/இ1)**

**தீர்மான எண் : 266 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**மன்றபொருள் .14.** நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 21 எண்ணிக்கை சமுதாய கழிவறைகளை ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் தினசரி சுத்தம் செய்யும் பணிக்கு கடலூார் , மக்கள் தொடர்பு அலுவலர் மூலமாக ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு 27.10.2018 அன்று தினமலர் நாளிதழில் வெளியிட்டதற்கு பட்டியல் தொகை ரூ. 13440/– நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின்அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலக குறிப்பு . மன்றம் அனுமதிக்கலாம்

**<u>ந.க.எண் .4107/2018/H1</u>**

**தீர்மான எண் : 267 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**மன்றபொருள் .15.** ஆயுத பூஜையை **(18.10.2018)** முன்னிட்டு ‘‘தொழில் மலர் **2018** ‘‘ நெல்லிக்குப்பம் நகராட்சியில் **2017–18** மற்றும் **2018–19** ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட , மேற்கொள்ளப்பட இருக்கும் திட்ட பணிகளின் விவரத்தை கடலூார் , மாவட்ட ஆட்சித் தலைவர் ந.க.எண். **127**/செமதொ/**2018** நாள்.**31.08.2018**ன் படி விளம்பரம் செய்ததில் தினகரன் (KAL PUBLICATIONS (P) LTD) நாளிதழ்க்கு விளம்பரத் தொகை ரூ . **15750/–** நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

<u>அலுவலகக்குறிப்பு:–</u> மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் . 3784/2018/இ1)**

**தீர்மான எண் : 268 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**மன்றபொருள் .16 .**ஆயுத பூஜையை **(18.10.2018)** முன்னிட்டு ‘‘தொழில் மலர் **2018** ‘‘ நெல்லிக்குப்பம் நகராட்சியில் **2017–18** மற்றும் **2018–19** ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட , மேற்கொள்ளப்பட இருக்கும் திட்ட பணிகளின் விவரத்தை கடலூார் , மாவட்ட ஆட்சித் தலைவர் ந.க.எண். **138**/செமதொ/**2018** நாள்.**27.09.2018**ன் படி விளம்பரம் செய்ததில் தமிழ்முரசு (KAL PUBLICATIONS (P) LTD) நாளிதழ்க்கு விளம்பரத் தொகை ரூ.**9975/–** நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

<u>அலுவலகக்குறிப்பு:–</u> மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் . 3785/2018/இ1**

**தீர்மான எண் : 269 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**மன்றபொருள் .17** நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு சொந்தமான அலுவலக ஜெராக்ஸ் மிஷினில் உள்ள ட்ரம் யுனிட் பழுதடைந்துள்ளது . M/s . Excite Inc . புதுச்சேரி , நவம்பர் **22** , **2018** கடிதத்தின் படி மேற்காணும் அங்கிகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து ஜெராக்ஸ் மிஷினுக்கு தேவையான டரம் யுனிட் ஒன்று புதியதாக வாங்கி பொருத்தி கொள்ள செலவினம் ரூ.27990 /– ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின்அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலக குறிப்பு . மன்றம் அனுமதிக்கலாம்

**<u>ந.க.எண் .2429/2018/E1</u>**

**தீர்மான எண் : 270 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**மன்றபொருள் .18** நெல்லிக்குப்பம் நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மன்ற தீர்மான எண். **241**, நாள் 30.10.2018 ன் படி 22.11.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் . 15 வாழப்பட்டு பள்ளத் தெருவில் மழை நீர் வடிகால் மற்றும் சிறு பாலம் அமைக்கும் பணி | **6.80** | M/s.அருணாச்சல அசோசியேட் | **0**.05% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு.k.N.முருகன் | 0.80% மதிப்பீட்டை விட அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு:–</u> வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான **0.05** % ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.அருணாச்சல அசோசியேட் ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**ந.க.எண் . 4701/2018/இ1)**

**தீர்மான எண் : 271 அலுவலக குறிப்பினை ஏற்று குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்க அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள் .19.** நெல்லிக்குப்பம் நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மன்ற தீர்மான எண். **242**, நாள் 30.10.2018 ன் படி **16**.11.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | நெல்லிக்குப்பம் நகராட்சி பேருந்து நிலையத்தில் செயல்பட்டு வரும் கட்டண கழிவறையின் மோட்டார் , தண்ணீர் தொட்டி , கதவுகள், மின் இணைப்புகள் முற்றிலும் சேதம் அடைந்துள்ளதையும் , மேலும் செப்டிக் டேங்க் நிறைந்துள்ளதை பராமரிப்பு பணி செய்தல் . | **1.50** | திருமதி. எஸ்.பரிமளா | **0**.20% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திருமதி. எஸ்.புவனேஸ்வரி | 0.86% மதிப்பீட்டை விட அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு:–</u> வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான **0.20** % ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருமதி. எஸ்.பரிமளா ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**ந.க.எண் . 4702/2018/இ1)**

**தீர்மான எண் : 272 அலுவலக குறிப்பினை ஏற்று குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்க அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள் .20.** நெல்லிக்குப்பம் நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மன்ற தீர்மான எண். **243**, நாள் 30.10.2018 ன் படி **13.11.2018** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாயில் ) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | மூன்று எண்ணிக்கை GSM Based face & finger Based Bio martic Device அமைத்தல் பணி | 66000/- | M/s.Cubic Info System Villupuram | **0**.06% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | M/s.Om Vinayaka Computer Villupuram | 1.04% மதிப்பீட்டை விட அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு:–</u> வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான **0.06** % ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Cubic Info System Villupuram ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**ந.க.எண் . 4703/2018/இ1)**

**தீர்மான எண் : 273 அலுவலக குறிப்பினை ஏற்று குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்க அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள் .21.** நெல்லிக்குப்பம் நகராட்சி மன்ற தீர்மான எண் . 182 நாள் 07.09.2018 ல் வரிசை எண். 1ல் 9 எண்ணிக்கை Battery Operated Vehicle (BOV) வழங்குதல் பணி ரூ. **16.50** இலட்சம் என உள்ளதை 13 எண்ணிக்கை Battery Operated Vehicle (BOV) வழங்குதல் பணி ரூ. **24.00** இலட்சம் என திருத்திய மதிப்பிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

அலுவலக குறிப்பு . **1.**மன்றம் அனுமதிக்கலாம் .

2 .அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதை அங்கீகரிக்கலாம் . .

**<u>(கோப்பு எண்.3905/2018/இ1)</u>**

**தீர்மான எண் : 274 அலுவலக குறிப்பினை ஏற்று அங்கீகரிக்கப்பட்டது .**

**மன்றபொருள் .22.** நெல்லிக்குப்பம் நகராட்சி தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மன்ற தீர்மான எண். **182**, நாள் 07.09.2018 ன் படி **31.10.2018** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில் ) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | 13 எண்ணிக்கை Battery Operated Vehicle (BOV) வழங்குதல். | 24.00 | M/s.Encon Engineers No . 4 , Amman Nagar Coimbatore - 41 | **0**.28% மதிப்பீட்டை விட குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | M/s.Priyam Industries and Engineering Pvt Ltd<br>Anna salai ,<br>Chennai | 2.51%<br>மதிப்பீட்டை விட அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு:–</u> வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான **0.28** % ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Encon Engineers No . 4 , Amman Nagar Coimbatore – **41** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**ந.க.எண் . 3905/2018/இ1)**

**தீர்மான எண் : 275 அலுவலக குறிப்பினை ஏற்று குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்க அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள் .23. இந்நகராட்சியின் 2017–18 ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது .**

அலுவலக குறிப்பு . .மன்றம் பதிவு செய்யலாம் .

**தீர்மான எண் : 276 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

**மன்றபொருள் .24.** நெல்லிக்குப்பம் நகராட்சி அலுவலக குடிநீர் விநியோகித்துக்கு பயன்படுத்தப்படும் 100 KVA ஜெனரேட்டர் FAN ASSEMBLYல் மர ஓனாய் மாட்டிக்கொண்டு உடைந்ததால் ஜெனரேட்டரை இயக்க முடியவில்லை . இதனை புதியதாக மாற்றவும் , ஜெனரேட்டரை ஆயில் சர்வீஸ் செய்யவும் தோராய செலவினம் ரூ.40000/– த்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் வரும் குடிநீர் விநியோகம் அவசர அவசியம் கருதி ஜெனரேட்டர் அங்கீகாரம் பெற்ற டீலர் வசம் விலைபுள்ளி கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

அலுவலகக் குறிப்பு:1. மன்றம் அனுமதிக்கலாம் .

2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு மற்றும் பணி மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம் .

**(ந.க.எண் . 4941/2018/இ1)**

**தீர்மான எண் : 277 அலுவலக குறிப்பினை ஏற்று அங்கீகரிக்கப்பட்டது .**

**மன்றபொருள் .25.** நெல்லிக்குப்பம் நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர் கூடுதல் பொறுப்பு அவர்களின் அக்டோபர் – 2018 மாதத்திய நாட்குறிப்பேடு மன்றத்தின் பார்வைக்கும் , பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம் .

<u>கோப்பு எண் . 3792/2018/இ1</u>

**தீர்மான எண் : 278 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

**மன்றபொருள். 26.** நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2016–17ல் மூன்றாவது திருத்திய நிர்வாக அனுமதி கோரி 01.08.2018 அன்று நகர மன்ற தீர்மான எண் . 158 நாள் . 30.07.2018 ல் உடன் பிரயோதனை அனுப்பபட்டது . இதன் அடிப்படையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண் . 30362/2016/P3, நாள் . 22 . 11 . 2018ல் திருத்திய மூன்றாவது நிர்வாக அனுமதி பெறப்பட்டது . இதில் பழைய பணிகள் ரத்து செய்து அனுமதி வழங்கப்பட்டுள்ளது . எனவே இத்திட்டத்தின் கீழ் ஏற்கனவே எடுக்கப்பட்ட பணிகளில் ஆரம்பிக்கபடாத கீழ்கண்ட பணிகளான இரண்டு பணிகளை ரத்து செய்யவும் இப் பணிக்காக

செலுத்தப்பட்ட முன் வைப்புத் தொகையை ஒப்பந்ததாரருக்கு திருப்பி வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் உரக்கிடங்கில் உரம் தயாரிக்க ஏதுவாக வின்ரோஸ் மேடைக்கு மேல் கூரை அமைக்கும் பணி மற்றும் உரம் தயாரிக்கும் இயந்திரக்கூடம் கட்டும் பணி . | 46.00 |
| 2 | திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் மேல்பாதி உரக்கிடங்கில் நிர்வாக கட்டிடம் , பணியாளர் ஒய்வு அறை , சுற்று சுவர், உட்புறம் காங்கிரிட் பேவர் பிளாக் சாலை அமைக்கம் பணி , உரக்கிடங்கில் வாகனங்கள் நிறுத்தும் கூடம் , தண்ணீர் வசதி , மின் விளக்கு வசதி மற்றும் பசுமை வளையம் அமைத்தல் பணி . | 90.25 |

**அலுவலகக் குறிப்பு:.** - மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண் . 2023/2018/இ1)**

**தீர்மான எண் : 279 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**மன்றபொருள். 27.**நெல்லிக்குப்பம் நகராட்சி உட்பட்ட வார்டு எண்.08ல் உள்ள முஸ்லீம் மேட்டுத் தெருவில் வசிக்கும் முஹம்மது சாலி த/பெ அப்துல் வகாப் என்பவருக்கு சொத்துவரி விதிக்கப்பட்டு (வரி விதிப்பு எண்.094/008/00137) அரையாண்டுக்கு ரூ.257/— சொத்துவரி செலுத்தி வருகிறார். அன்னாரின் வீட்டிற்கு குப்பை வரி(SUC) சேர்க்கப்பட்டுள்ளது. ஆனால்,

2017—18 முதல் அரையாண்டுக்கு ரூ.300/—யும்,

2017—18 இரண்டாம் அரையாண்டுக்கு ரூ.600/— யும்

வணிக பயன் என கருதி தவறாக பதிவாகி உள்ளதால், அதனை நீக்கம் செய்யவும் குடியிருப்பு பயனுக்கான குப்பை வரி (SUC) விதித்திடவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.4557/2018/அ1

**தீர்மான எண் : 280 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**மன்றபொருள். 28.** நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு சொந்தமான பள்ளிகள் , சத்துணவு கூட.ங்களில் இயங்கி வரும் மின்சாதன பொருட்கள் , மின் விசிறி பழுதடைந்த பொருட்களை புதியதாக மாற்றவும் , பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.15000/—க்கும் செலவை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் பணியை ஒப்படைப்பு பணியாக இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திருமதி . S. புவனேஸ்வரி மூலம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

அலுவலகக் குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண் . 4945/2018/இ1)**

**தீர்மான எண் : 281 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**மன்றபொருள். 29.** நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு சொந்தமான ஆரம்ப சுகாதார மையம் , நகராட்சி அலுவலகம் மற்றும் நூலகம் ஆகியவற்றில் செயல்பட்டு வரும் மின் சாதன விளக்குகள் மின் விசிறி பழுதடைந்ததால் பிட்டிங் ஆகியவற்றை புதியதாக மாற்றவும் , பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.20000/—க்கும் செலவை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் பணியை ஒப்படைப்பு பணியாக இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு . S. சந்திரசேகர் மூலம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

அலுவலகக் குறிப்பு:1. மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண் . 4946/2018/இ1)**

**தீர்மான எண் : 282 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**மன்றபொருள். 30.** நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு வார்டு எண்.6ல் அமைந்துள்ள பொது சுகாதார மையத்தில் மின் இணைப்பு ஒயர் பழுது ஏற்பட்டுள்ளது . இதனை சரி செய்ய தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.4500/–க்கும் செலவை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் பணியை ஒப்படைப்பு பணியாக இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு . S. சந்திரசேகர் மூலம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

அலுவலகக் குறிப்பு:. மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண் . 4947/2018/இ1)**

**தீர்மான எண் : 283 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**மன்றபொருள். 31.** நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு வார்டு எண்.24 தந்தை பெரியார் தெரு குறுக்கு சந்திப்பில் சிமெண்ட சாலை உடைந்து மிகவும் மோசமாக உள்ளது . இதனால் பொது மக்கள் பயன்பாட்டிற்கு இடையூறாக உள்ளது . எனவே இதனை சரி செய்ய தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.19000/–க்கும் செலவை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் பணியை ஒப்படைப்பு பணியாக இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு . S. வீரமோகன் மூலம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

அலுவலகக் குறிப்பு:. மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண் . 4948/2018/இ1)**

**தீர்மான எண் : 284 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**மன்றபொருள். 32 .** நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு வார்டு எண். 25 காமராஜ் நகர் மற்றும் வார்டு எண். 26 அவலியா நகரில் RCC PIPE சிறுபாலம் அமைத்து மழைநீர் வெளியேற தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.16000/–க்கும் செலவை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் பணியை ஒப்படைப்பு பணியாக இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு .S. பரிமளா மூலம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

அலுவலகக் குறிப்பு:. மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண் . 4949/2018/இ1)**

**தீர்மான எண் : 285 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**மன்றபொருள். 33 .** நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு அலுவலக பின்புறம் அமைந்துள்ள Onsite Composting Centre ல் Shredder Mechine அமைக்க பாதுகாக்க Shed அமைக்க தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.150000/–க்கும் செலவை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

அலுவலகக் குறிப்பு:. மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண் . 4950/2018/இ1)**

**தீர்மான எண் : 286 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**மன்றபொருள். 34 .** நெல்லிக்குப்பம் நகராட்சி ஜம்புலிங்கம் பூங்கா மேல்நிலை நீர்தேக்க தொட்டி வளாகத்தில் உள்ள மின் மோட்டார் அறை முற்றிலும் சேதம் அடைந்து உள்ளது . மூன்று மின் மோட்டார் அறைகளில் உள்ள மின் மோட்டார் , ஸ்டாடர் ஒரே அறையில் அமைக்கவும் புதியதாக மின் மோட்டார் அறை கட்ட தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.400000/–க்கும் செலவை நகராட்சி குடிநீர் விநியோக நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

அலுவலகக் குறிப்பு:. மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண் . 4951/2018/இ1)**

**தீர்மான எண் : 287 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**மன்றபொருள். 35 .** நெல்லிக்குப்பம் நகராட்சி வார்டு எண். **24** தந்தை பெரியார் தெரு வள்ளளார் கோயில் எதிரில் உள்ள சிறு பாலத்தின் டெக்சிலாப் (Deck Slab) உடைந்து விட்டது . இதனால் பொது மக்கள் மற்றும் வாகன போக்குவரத்துக்கு மிகவும் சிரமமாக உள்ளது . இதனை சரி செய்ய தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.70000/—க்கும் செலவை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

அலுவலகக் குறிப்பு:. மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண் . 4970/2018/இ1)**

**தீர்மான எண் : 288 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

தனி அலுவலர்
நெல்லிக்குப்பம் நகராட்சி